# I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE
# DEPOSITIONS OF WITNESSES
# (CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)
# DEPOSITIONS OF WITNESSES P.W.1
# OS.NO.56/2018 (C/w. O.S.24/2019, OS 57/2019 and O.S 66/2019) Joint Trial

Name : லிங்கமூர்த்தி

Father/Husband Name : சாம்பசிவம்

Age : 58

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 05.02.2026.

இரு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

விசாரணை தொடங்கிய நேரம் : 03.15 P.M.

**1 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

தாவா சொத்தை பிரதிவாதிகள் 19.03.2018 அன்று பாலு வகையறாவுக்கு கலா வகையறா விற்றுவிட்ட விஷயம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பாலு வகையறா 15.07.2020 அன்று தானபத்திரம் முன்னிலைக்கு அந்த சொத்துக்களை அவரின் மகள் பிரியாவிற்கு கொடுத்துவிட்டார்கள் என்றால் சரியல்ல. அதற்கு முன்பாகவே என் மகன் புவின் பெயரில் உயில் எழுதப்பட்டுள்ளது. நான் எழுதிய பத்திரம் செல்லாது என்றால் சரியல்ல. அனைத்து ஆவணங்களையும் வைத்துதான் பதிவு செய்தோம்.

இன்றைய தேதியில் பட்டா எண் 1979 சர்வே எண் 324/1B2 மோகனப்பிரியா பெயரில் உள்ளது என்றால் சரியல்ல அது டூப்ளிகேட். என் மகன் பெயரில்தான் எல்லாமே உள்ளது. தற்போது தாவா சொத்து மோகனப்பிரியா பெயரில் இருப்பதால் மோகனப்பிரியா மற்றும் பாலு வகையறா ஆகியவர்களை நான் தாக்கல் செய்த வழக்கில் தரப்பினர்களாக சேர்க்காததால் நான் தாக்கல் செய்த வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

விசாரணை முடிந்த நேரம் : 03.20 p.m.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு கையெழுத்திட்டார்.

G SANTHI
Digitally signed by G SANTHI
Date: 2026.02.05 19:06:40 -0100

முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,
வேலூர்.